பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**11 01 2026** **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு பொதுமக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. கேரளாவின் வளர்ச்சிக்காக மத்திய அரசு கடந்த பத்தாண்டுகளில் 3 லட்சத்து 23 ஆயிரம் கோடி ரூபாயை வழங்கியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. சட்டீஸ்கரில் அரசு ஊழியர்களுக்கு மூன்று சதவீத அகவிலைப்படி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

4. இலங்கையில் **Ditwah** புயலினால் பாதிக்கப்பட்ட ரயில் பாதையை இந்தியாவின் நிதியுதவியுடன் சீரமைப்பதற்கான பணிகள் இன்று தொடங்கின.

5. எஸ்டோனியா சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Rujula Ramu** பட்டம் வென்றார்.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு பொதுமக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

ஆன்மிக தலைவர் ஸ்ரீமத் விஜயரத்ன சுந்தர் சூரியவஜ்ஜி மகாராஜின் **500-**ஆவது புத்தக வெளியிட்டு விழாவில் காணொலி வாயிலாக உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

மரங்கள் நடுவது, தூய்மையை பராமரிப்பது, இயற்கை வேளாண்மைக்கு ஆதரவு அளிப்பது, ஏழைகளுக்கு உதவுவது, ஆரோக்கியமான வாழ்வியல் முறைகளை கடைபிடிப்பது போன்றவற்றை தீர்மானங்களாக எடுத்துக்கொண்டு பொதுமக்கள் செயல்பட வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

உலக அளவில் மோதல் சூழல் நிலவி வருவதை சுட்டிக்காட்டிய திரு நரேந்திர மோடி, அமைதி மற்றும் நல்லிணக்கமே தற்போது தேவையாக உள்ளது என்று கூறினார்.

<<<<<>>>>>>

கேளராவின் வளர்ச்சிக்காக மத்திய அரசு கடந்த பத்தாண்டுகளில் **3** லட்சத்து **23** ஆயிரம் கோடி ரூபாயை வழங்கியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று திருவனந்தபுரத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்தியில் காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பில் இருந்த 2004-ஆம் ஆண்டு முதல் 2014-ஆம் ஆண்டு வரை கேரளாவிற்கு 72 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியதாக கூறினார்.

உண்மை நிலை இவ்வாறு இருக்க, கேரள நலனுக்கு எதிராக பிரதமர் செயல்படுவதாக முதலமைச்சர் திரு பினராய் விஜயன் குற்றம் சாட்டுவதாக குறிப்பிட்டார்.

பொதுமக்கள் இந்த உண்மையை அறிந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த புள்ளி விவரங்களை கேரள முதலமைச்சர் மறுப்பாரா என்றும் திரு அமித் ஷா வினவினார்.

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இளம் தலைவர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பல்வேறு தலைப்புகளில் விவாதங்கள் நடைபெற்று வருவதாக மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சி நேற்று தொடங்கியதை சுட்டிக்காட்டினார்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் இதில் உரையாற்றியதாக அவர் கூறினார்.

இன்றைய அமர்வில் இளம் தலைவர்கள் பலர் தங்களது படைப்புகளை சமர்ப்பித்ததாக அவர் தெரிவித்தார்.

இந்த படைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டு, பிரதமர் திரு நரேந்திர மோடியிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<>>>>>>

காமன்வெலத் அவைத் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்க வரும் அனைவரையும் வரவேற்பதாக மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இந்த மாநாடு வரும் புதன்கிழமை தொடங்கி, மூன்று நாட்கள் நடைபெறவுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<>>>>>>

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், சூரியசக்தி மின் உற்பத்திக்கும், பயன்பாட்டிற்கும் மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக கூறினார்.

இதன் காரணமாக, சூரியமின்சக்தியை பயன்படுத்தும் குடியிருப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைநோக்கு பார்வையுடன் மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்று திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம், ஊரக பகுதிகளின் மேம்பாட்டை உறுதி செய்யும் என்று பிஜேபி-யின் தேசிய செயல் தலைவர் திரு நிதின் நபின் கூறியுள்ளார்.

தமிழகத்தின் கோவையில் இந்த திட்டம் குறித்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

ஊரகப்பகுதிகளின் மேம்பாட்டை இந்த திட்டம் உறுதி செய்யும் என்று அவர் தெரிவித்தார்.

இதன்மூலம், கிராம மக்கள் தங்களுக்கு தேவையான திட்டங்களை செயல்படுத்த முடியும் என்றும் திரு நிதின் நபின் கூறினார்.

<<<<<>>>>>>

தெலங்கானாவில், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச் சட்டம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு அம்மாநில பிஜேபி தலைவர் திரு ராமச்சந்திர ராவ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று ஹைதராபாதில் இதுதொடர்பாக பிஜேபி சார்பில் நடைபெற்ற பயிலரங்கை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்த சட்டம் குறித்து தெலங்கானா முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி தவறான தகவல்களை பரப்பி வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

இதனை முறியடிக்கும் வகையில், பிஜேபி தொண்டர்கள் கிராமந்தோறும் சென்று இந்த சட்டத்தின் நன்மைகள் குறித்து பொதுமக்களிடம் எடுத்துரைக்க வேண்டும் என்றும் திரு ராமச்சந்திர ராவ் வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் குறித்த காலத்திற்குள் நிறைவேற்றப்படுவதை பிரகதி உறுதி செய்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

தகவல் தொழில்நுட்ப வசதியை பயன்படுத்தி, திட்டங்களின் செயலாக்கத்தை பிரதமர் நேரடியாக கண்காணித்துவரும் இந்த பிரகதி, அரசுத்துறைகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளுக்கு உதவிகரமாக உள்ளது என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

குறித்த காலத்திற்குள் முடிவுகளை எடுப்பதிலும், அவற்றை நிறைவேற்றுவதிலும் பிரகதி முக்கிய பங்கு வகிப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

இலங்கையில் **Ditwah** புயலினால் பாதிக்கப்பட்ட வடக்கு ரயில் வழித்தடத்தை சீரமைப்பதற்கான பணிகள் இன்று தொடங்கின.

**Maho** ரயில் நிலையத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய இலங்கைக்கான இந்திய தூதர் திரு **Santosh Jha,** இந்தியாவின் நிதியுதவியுடன் இந்த பணிகள் நடைபெறுவதாக கூறினார்.

நிகழ்ச்சியில் பேசிய அந்நாட்டு ரயில்வே அமைச்சர் திரு **Bimal Rathnayake,** இந்தியாவின் நிதியுதவிக்காக நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

**Ditwah** புயல் காரணமாக கட்டமைப்புகள் பெரிய அளவில் சேதமடைந்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சிக்கலான தருணங்களில் இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து உதவி வருவதாகவும் திரு **Bimal Rathnayake** கூறினார்.

<<<<<>>>>>>

சட்டீஸ்கரில் அரசு ஊழியர்களுக்கு மூன்று சதவீத அகவலைப்படி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

ராய்பூரில் நடைபெற்ற அரசு ஊழியர்கள் சம்மேளனத்தின் மாநாட்டில் இதற்கான அறிவிப்பினை அம்மாநில முதலமைச்சர் திரு விஷ்ணுதியோ சாய் வெளியிட்டார்.

ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுபவர்களுக்கும் இந்த அகவிலைப்படி உயர்வு பொருந்தும் என்றும் அவர் கூறினார்.

அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் பிஜேபி அரசு செயல்பட்டு வருவதாக திரு விஷ்ணுதியோ சாய் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவில் வளர்ச்சியை முன்நிறுத்தியே பிஜேபி உள்ளாட்சித் தேர்தலை எதிர்கொள்வதாக அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர ஃபட்நவிஸ் கூறியுள்ளார்.

இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமது உரைகளில் 95 சதவீதம் வளர்ச்சி குறித்த அம்சங்களே இடம்பெற்றுள்ளதாக கூறினார்.

<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் அம்மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜியின் நடவடிக்கைகளுக்கு கண்டனம் தெரிவித்து பிஜேபி சார்பில் இன்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கொல்கத்தாவில் எதிர்க்கட்சித் தலைவரும், பிஜேபி-யின் மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு Suvendhu Adhikari தலைமையில் பிஜேபி-யினர் பேரணியாக சென்று அரசுக்கு எதிராக கோஷமிட்டனர்.

அரசு அதிகாரிகள், எதிர்க்கட்சிகள் உட்பட அனைத்துத்தரப்பினர் மீதும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் தாக்குதல் நடத்துவதாக திரு Suvendhu Adhikari குற்றம் சாட்டினார்.

காவல்துறையினரும் இதற்கு உதவி புரிவதாக அவர் தெரிவித்தார்.

இது ஏற்புடையது அல்ல என்றும் திரு **Suvendhu Adhikari** கூறினார்.

<<<<<>>>>>>

ரஷ்யா மீது யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்.

**Voronezh** நகரை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில், பத்துக்கும் மேற்பட்ட அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்கள், பள்ளி கட்டிடங்கள் சேதமடைந்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>>

சிரியாவில் ஐ எஸ் தீவிரவாத முகாம்களை குறிவைத்து அமெரிக்கா மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஐ எஸ் ஐ எஸ் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் அமெரிக்க பாதுகாப்புப் படையினர் இரண்டு பேர் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த தாக்குதலை அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது.

அமெரிக்கா நடத்திய தாக்குதலில் தாங்களும் பங்கு வகித்ததாக ஜோர்டான் அறிவித்துள்ளது.

<<<<<>>>>>>

ஈரானில் நடைபெற்றுவரும் அரசுக்கு எதிரான போராட்டங்களின்போது நேரிட்ட வன்முறை சம்பவங்கள் காரணமாக, உயிரிழந்தோர் எண்ணிக்கை **116**-ஆக அதிகரித்துள்ளது.

**2** ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சிறை பிடிக்கப்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இணையதள சேவையும், தொலைபேசி இணைப்பும் பல்வேறு பகுதிகளில் துண்டிக்கப்பட்டுள்ளதாக அந்த செய்திகள் மேலும் கூறுகின்றன.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

எஸ்டோனியாவில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Rujula Ramu** பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **21-15, 21-13** என்ற செட் கணக்கில், டென்மார்க்கின் **Frederikke O Stergaard**-ஐ வென்றார்.

---------------

வதோதரா சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Payas Jain — Syndrela Das** இணை பட்டம் வென்றது.

**இன்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 8-11, 11-9, 11-3, 11-6 என்ற செட் கணக்கில், இந்தியாவின் Harmeet Desai — Yashaswini Ghorpade இணையை வென்றது.**

**<<<<<END>>>>>>**